**சுருக்கம்**

**நீர்வளம் – பொதுப்பணித்துறை – நிலத்தடி நீர் வளத்தினைப் பெருக்க ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் நீரோடைகளில் தடுப்பணைகள் அமைக்கும் பெருந்திட்டம் ரூ. 550 கோடியில் 2008–2009 முதல் 2012–2013 வரையிலான ஐந்து ஆண்டுகளில் செயல்படுத்த நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டது – 2011–2012 ஆம் ஆண்டு பெருந்திட்டத்தில் மாறுதல் – 2011–2012 ஆம் ஆண்டில் 47 புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் செயல்படுத்த ரூ.1234.84 இலட்சங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.**

---

**பொதுப்பணித் (ஆர்.2) துறை**

**அரசாணை (நிலை) எண்.221** **நாள்: 01.11.2011**
**ஐப்பசி–15, திருவள்ளுவராண்டு 2042**

**படிக்க:**

1. அரசாணை (நிலை) எண்.198, பொதுப்பணி(ஆர்.2)துறை, நாள் 10.6.2008.
2. அரசாணை (நிலை) எண்.60, பொதுப்பணித்துறை, நாள் 28.2.2011.

**மீண்டும் படிக்க:**

3. தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–113 அவர்களின் கடித எண்.ட்டி6/எப்–104/RWH/2008, 12.1.2011 மற்றும் 13.1.2011.
4. தலைமைப் பொறியாளர், (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–5 கடித எண்.எப்.1/ARS/5445/2010, நாள் 20.1.2011
5. முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை, கடித எண்.எஸ்7(2)/55310/2008, நாள் 25.1.2011.

*****

**ஆணை:**

தமிழகத்தில் மிகவும் வேகமாகவும் கட்டுப்பாடற்ற முறையிலும் நிலத்தடி நீர் உபயோகப்படுத்தப்பட்டு வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தும், அதன் தரம் குறைந்தும், அரிதான, இயற்கைவளமான நீர் ஆதாரங்களில் நிலத்தடி நீர் கிடைக்கக்கூடிய வாய்ப்பும் குறைந்து வருகின்றது. சட்ட மன்ற பேரவையில் 26.8.2011 அன்று பொதுப்பணித்துறை மான்யக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, செயற்கை முறையில் நிலத்தடி நீரை செறிவூட்ட தடுப்பு அணைகள், கசிவுநீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் போன்ற 102 கட்டுமானங்களை ரூபாய் 49.00 கோடி மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தவும் நிலத்தடி நீர் இருப்பை மேம்பாடு செய்யவும் அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2. இதனைத் தொடர்ந்து, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மாநிலமெங்கிலும் உள்ள ஆறுகள், சிற்றாறுகள் மற்றும் ஓடைகளின் குறுக்கே தடுப்பணைகள், கசிவு நீர் குட்டைகள், நிலத்தடி நீர் செறிவூட்டும் துளைகள் ஆகியவற்றை அமைத்து செயற்கை முறையில் நிலத்தடி நீர் செறிவூட்ட 102 கட்டுமானங்களை ரூ. 49.00 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. இதனடிப்படையில், 2011–2012 நடப்பு நிதியாண்டில் ரூ.1234.84 இலட்சங்கள் மதிப்பீட்டிலான 47 புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் மேற்கொள்ள தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) மதிப்பீடுகளை அரசாணை (நிலை) எண்.198, பொதுப்பணித்துறை, நாள் 10.6.2008ல் பத்தி 4 (II)ல் குறிப்பிட்டுள்ளவாறு, அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு அதாவது 2009–10 மற்றும் 2010–11ற்கான செயல்திட்டத்திற்கு (Action Plan) உரிய மாற்றங்கள் தேவைப்படின், அதற்கேற்றார்போல் மாற்றியமைக்க தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதால், பெருந்திட்டத்தில் சில மாறுதல்கள் செய்து மதிப்பீடுகளை அனுப்பி, அரசின் ஒப்புதல் கோரியுள்ளார். முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணிதுறை இக்கருத்துருவினை அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. நடப்பு நிதியாண்டில் செயற்கை முறையில் நிலத்தடிநீர் செறிவூட்ட ரூபாய் 1.00 கோடிக்கு உட்பட்ட ரூ.1234.84 இலட்சங்கள் (ரூபாய் பன்னிரெண்டு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து என்பத்து நான்காயிரம் மட்டும்) மதிப்பீட்டிலான 47 புதிய திட்ட பணிகளை மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் மூலம் செயல்படுத்துவதற்கு தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு, முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), பொதுப்பணித்துறை அவர்களால் அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்ட தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் அனுப்பியுள்ள மதிப்பீட்டுகளுடன் கூடிய கருத்துருவிற்கு ஒப்புதல் கோரி அரசுக்கு அனுப்பியுள்ளதை இணைப்பில் உள்ளபடி அதனதன்படி பிரித்து செயல்படுத்துவதற்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் அனுமதிக்கப்பட்ட பணிக்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்: –

> ''4702–00. சிறு பாசனம் குறித்த மூலதனச் செலவு – 102. நிலத்தடி நீர் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்– II. மாநிலத்திட்டம் - JD. செயற்கை முறையில் நிலத்தடி நீரினை சேகரிப்பதற்கான கட்டமைப்புத் திட்டம் – 16. பெரும்பணிகள் (த.தொ.கு.4702–00–102–JD–1609)''

6. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு ''புது துணைப் பணி (New Instrument of Service)" குறித்ததாகும். இதற்கான சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதலில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து (Contingency Fund) முன்பணமாக பெற்று மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (வ.செ.பொது–1) த்துறையிலிருந்து தனியாக வெளியிடப்படும். எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்பளிப்பு பெற உரிய படிவத்தில் இவ்வரசாணையுடன் நிதி (வ.செ.பொது–1) த்துறைக்கு விண்ணப்பிக்குமாறு தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும்

மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம், பொதுப்பணித்துறை அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை **2011–2012** ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் (Supplementary Estimate) சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் நிதி **(வ.செ.பொது–1 / பொ.ப.2)** த்துறைக்கு தவறாமல் அனுப்புமாறு தலைமைப் பொறியாளர், மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**7.** மேலும், எதிர்பாரா செலவினங்கள் (Unforeseen Items) சில்லரை மேற்பார்வை செலவினங்கள் (Petty Supervision Charges) மற்றும் சில்லரை செலவினங்கள் (Contingency Charges) ஆகிய அனைத்து இனங்களும் சேர்த்து (Altogether) மொத்த பணிகளுக்கான செலவினத்தில் **2.5**%-க்கு மிகாமல் செலவிடப்பட வேண்டும் என்றும், இதனை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட தலைமைப் பொறியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கிடுமாறும் தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்) அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.எண்.**47942**A/PW.II/2011, நாள் **3.10.2011–**ல் பெறப்பட்ட இசைவுடனும் மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.**601** (அறுநூற்று ஒன்று) உடனும் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**எம். சாய் குமார்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத் துறை, சென்னை–**5.**
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத் துறை, சென்னை–**5.**
தலைமைப் பொறியாளர் (மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர்வள ஆதார விவரக் குறிப்பு மையம்), தரமணி, சென்னை –**113.**
அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள்.
மாவட்ட ஆட்சித்தலைவர், கிருஷ்ணகிரி, ஈரோடு, கோயம்புத்தூர், அரியலூர், திருச்சி, புதுக்கோட்டை, கரூர், திண்டுக்கல், மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி.
மாநில கணக்காயர், சென்னை–**18**/ பெயரில்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – **5.**
ஆளுநரின் தனிச் செயலர், கிண்டி, சென்னை–**25.**
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயலர், சென்னை–**9.**
மாண்புமிகு நிதி அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – **9.**
மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–**9.**
நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு குடிநீர் வாரியம், சென்னை–**5.**
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), நந்தனம், சென்னை–**35.**
முதன்மை வனப் பாதுகாப்பு அலுவலர், வனத்துறை , சென்னை–**6.**
பொதுப்பணித்துறை (அனைத்து பாசனப் பரிவுகள்), சென்னை–**9.**
நகல்
நிதி (வ.செ.பொது. I மற்றும் II) / (பொ.ப.II) துறை /வேளாண்மை/சுற்றுச் சூழல்/
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை –**9.**
இ.கோ/உ.கோ.

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**

**பிரிவு அலுவலர்.**

# இணைப்பு

## அரசாணை (நிலை) எண்.221, பொதுப்பணித்துறை, நாள் 01.11.2011

| வ. எண் | மாவட்டம் | திட்டத்தின் பெயர் | பெருந்திட்டத்தில் உள்ள குறிப்பு (இருப்பின்) | மதிப்பீட்டுத் தொகை ரூபாய் இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| மதிப்பீட்டுத் தொகை ரூ 1 கோடிக்கு கீழ் உள்ள மதிப்பீடுகள் | | | | |
| 1 | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், பர்கூர் கிராமத்தில் நீரள்ளகோட்டை க.ச.எண் 77 மற்றும் 108அருகே குட்டை அமைத்தல் | புதிய திட்டம் | 14.00 |
| 2 | ஈரோடு | ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், நாகலூர் கிராமத்தில் க.ச.எண் 103இல் குட்டை அமைத்தல் | புதிய திட்டம் | 22.23 |
| 3 | ஈரோடு | ஈரோடு மாவட்டம், பவானி வட்டம்,வெள்ளிதிருப்பூர் கிராமத்தில் சித்தார் ஆற்றின் குறுக்கே க.ச.எண் 737இல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 26.85 |
| 4 | ஈரோடு | ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், நாகலூர் கிராமத்தில் க.ச.எண் 30இல் வண்ணார் ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல் | புதிய திட்டம் | 46.80 |
| 5 | ஈரோடு | ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், சென்றாயம்பாளையம் கிராமத்தில் க.ச.எண் 60இல் குட்டை அமைத்தல் | புதிய திட்டம் | 18.81 |
| 6 | கோவை | கோவை மாவட்டம், கோயம்புத்தூர் தென் வட்டம், தென்கரை கிராமம் க.ச.எண் 220/2இல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 8.91 |
| 7 | அரியலூர் | அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம், வெண்மான்கொண்டான் கிராமம் அருகே விளாங்குடி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 72.80 |
| 8 | அரியலூர் | அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் சுத்தமல்லி கிராமம் அருகே விளாங்குடி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 54.10 |
| 9 | அரியலூர் | அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், வெற்றியூர் கிராமத்தில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 4.74 |
| 10 | அரியலூர் | அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் சதம்பாடி கிராமம் க.ச.எண் 84 ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 6.90 |
| 11 | அரியலூர் | அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் சதம்பாடி கிராமம் க.ச.எண் 118 ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 6.64 |
| 12 | திருச்சி | திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், மகிழம்பாடி கிராமம் அரசனேரி நீர்பிடிப்புவாரியின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 8.95 |

| | | | | |
|---|---|---|---|---|
| 13 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், சுந்தம்பட்டி கிராமம் க.ச.எண் 43 புதுக்குளம் நீர் வெளியேற்றும் வாரியின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 8.96 |
| 14 | புதுக்கோட்டை | புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை வட்டம், பூனகுளம் கிராமம் க.ச.எண் 318 ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 25.25 |
| 15 | கரூர் | கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், கிழக்கு சேந்தமங்கலம் கிராமம், க.ச.எண் 70ன் அருகே ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 12.50 |
| 16 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், அஞ்சுகுழிப்பட்டி கிராமம் க.ச.எண் 885 கிழவன்குளம் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 15.00 |
| 17 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், அஞ்சுகுழிப்பட்டி கிராமம் க.ச.எண் 672 சுடுகாட்டு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 15.00 |
| 18 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , அஞ்சுகுழிபட்டி கிராமம் அருகே தேவனார் ஓடையின் குறுக்கே க.ச.எண் 619 ல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 16.00 |
| 19 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , கூவனூத்து கிராமம் கன்னிமார் ஓடையின் குறுக்கே க.ச.எண் 534 ல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 14.00 |
| 20 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , கூவனூத்து கிராமம் கன்னிமார் ஓடையின் குறுக்கே க.ச.எண் 831 ல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 12.00 |
| 21 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் , ஈ.கள்ளிப்பட்டி கிராமம் (கருப்பன்ன கவுண்டர் தோட்டம்) சாணார்தோப்பில் க.ச.எண் 6 ல் உள்ள ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 23.75 |
| 22 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் , வளையப்பட்டி கிராமம் (கருப்பன்ன கவுண்டர் தோட்டம்) க.ச.எண் 204 மற்றும் 205 ல் பெருமாள் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 11.50 |
| 23 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , அஞ்சுகுழிபட்டி கிராமம் அருகே குட்டுக் காட்டு ஓடை குறுக்கே க.ச.எண் 967 ல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 15.00 |
| 24 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் , ஈ.புதூர் இடையக்கோட்டை கிராமத்தில் நங்கஞ்சியாறு ஆற்றின் குறுக்கே க.ச.எண் 374 ல் (பள்ளி வாசல் தோட்டம்) தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 22.50 |
| 25 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , அஞ்சுகுழிபட்டி கிராமம் அருகே படுகைகாட்டு ஓடை குறுக்கே க.ச.எண் 992 ல் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 14.00 |
| 26 | திண்டுக்கல் | திண்டுக்கல் மாவட்டம், திண்டுக்கல் வட்டம் , ராமலிங்கபட்டி அருகே கோடல்வாவி கிராமத்தில் மாங்கரை ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 30.00 |
| 27 | மதுரை | மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், கச்சைகட்டி கிராமத்தில் குட்லாடம்பட்டி குக்கிராமத்தில் அஞ்சுகுழிபட்டி ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 6.90 |

| | | | | |
|---|---|---|---|---|
| 28 | மதுரை | மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், ராஜக்கால்பட்டி கிராமத்தில் மஞ்சமலை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 13.70 |
| 29 | மதுரை | மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், என்.சிங்கம்புனரி கிராமத்தில் அணைக்கரைபட்டி அருகே பாலார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 31.00 |
| 30 | தேனி | தேனி மாவட்டம், அல்லி நகரம் கிராமம், பனசலார் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 6.20 |
| 31 | தேனி | தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் ஈ.புதுக்கோட்டை கிராமம், முருகமலை நகர் அருகே சிலம்பு ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 9.25 |
| 32 | தேனி | தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம் ஈ.புதுக்கோட்டை கிராமம், வரட்டார் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 6.80 |
| 33 | தேனி | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் ராயப்பன்பட்டி கிராமம், சுருளியாற்றின் குறுக்கே (எல்.எஸ் 29.85 கி.மீ ) இல் பன்னிமுட்டி பகுதியில் தடுப்பு சுவர் அமைத்தல் | புதிய திட்டம் | 54.00 |
| 34 | தேனி | தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம் ராயப்பன்பட்டி கிராமம், ஊத்துவயல்பகுதி (எல்.எஸ்.30.872 கிமீ) இல் சுருளியாற்றின் குறுக்கே தரை கீழ் தடுப்பு சுவர் (Grade Wall) அமைத்தல் | புதிய திட்டம் | 46.18 |
| 35 | சிவகங்கை | சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், திருவேகம்பட்டு கிராமம் சருகனியாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 36.70 |
| 36 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம், W.புதுப்பட்டி கிராமம் பெருமாள் கோயில் ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 20.70 |
| 37 | விருதுநகர் | விருதுநகர் மாவட்டம், விருதுநகர் வட்டம், செந்நெல்குடி கிராமம் கௌசிகாநதியின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 35.25 |
| 38 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமம் கோரையார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 61.50 |
| 39 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், கீலாம்பூர் கிராமம் கடனா ஆற்றின் குறுக்கே காக்கநல்லூர் அணைக்கட்டின் கீழ்புறம் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 76.59 |
| 40 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், தருவை கிராமம் பச்சையார் ஆற்றின் குறுக்கே தமிழக்குறிச்சி அணைக்கட்டின் கீழ்புறம் தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 93.85 |
| 41 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், பெருமாள்பட்டி கிராமத்தில் (சோலசேரி கிராமம் அருகே) தேவியார் ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 37.11 |
| 42 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலி வட்டம், பெருங்குடி கிராமம் அனுமாநதி ஆற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 23.50 |
| 43 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம், சென்னிகுளம் கிராமம் காக்கநதியின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 21.40 |

| | | | | |
|---|---|---|---|---|
| 44 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டம், இடைகால் கிராமம் பேய்ப்பாறை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 27.35 |
| 45 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், அஞ்சாங்கட்டளை கிராமம் அருகே பேய்ப்பாறை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 12.90 |
| 46 | திருநெல்வேலி | திருநெல்வேலி மாவட்டம், ஆலங்குளம் வட்டம், கடகனேரி கிராமம் அருகே வெள்ளோடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 20.17 |
| 47 | தூத்துக்குடி | தூத்துக்குடி மாவட்டம், கோயில்பட்டி வட்டம், சவலப்பேரி கிராமம் அருகே உப்போடையின் குறுக்கே தடுப்பணை அமைத்தல் | புதிய திட்டம் | 66.60 |
| | | **மொத்தம்** | | **1234.84** |

எம். சாய்குமார்
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

பிரிவு அலுவலர்.